துணை ஏடுகள் I - சிறப்பு நோக்க ஏடுகள்

மாதிரி வினாத்தாள்-3

11th Standard

Reg.No. :

**கணக்குப்பதிவியல்**

## I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:05:00 Hrs | Total Marks : 50

பகுதி-அ | 5 x 1 = 5

1) எந்திரம் வாங்கியது பதிவு செய்யப்படுவது

(a) விற்பனை ஏடு (b) முறையான குறிப்பேடு (c) கொள்முதல் ஏடு

2) கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்படுவது

(a) அணைத்து வகையான கொள்முதல் (b) ரொக்கக் கொள்முதல் மட்டும் (c) கடன் கொள்முதல் மட்டும்

3) கடன் விற்பனை பதிவு செய்யப்படுவது

(a) விற்பனை ஏடு (b) ரொக்க ஏடு (c) முறையான குறிப்பேடு

4) வாடிக்கையாளர் திருப்பிய சரக்கு பதிவு செய்யப்படுவது

(a) விற்பனை ஏடு (b) விற்பனைத் திருப்ப ஏடு (c) கொள்முதல் திருப்ப ஏடு

5) சனவரி 1, 2003 அன்று சந்திரன், சுந்தர் மீது ஒரு மூன்று மாத கால மாற்றுச் சீட்டினை எழுதினார்.அம மாற்றுச் சீட்டின் தவணை நாள்

(a) மார்ச் 31, 2003 (b) ஏப்ரல் 1, 2003 (c) ஏப்ரல் 4, 2003

பகுதி-ஆ | 4 x 2 = 8

6) சரக்குகள் திருப்பப்படுவதற்கான காரணங்கள் யாவை?அவை எங்கு பதியப்படுகின்றன?

7) திருப்ப ஏடுகளின் வகைகள் யாவை?

8) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு (Bills Receivable Book) குறிப்பு வரைக.

9) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு (Bills Payable Book) பற்றி நீவிர் அறிவது யாது?

பகுதி-இ | 4 x 3 = 12

10) கொள்முதல் திருப்ப ஏட்டின் படிவம் வரைந்து எடுத்தெழுதும் முறையைக் கூறுக.

11) விற்பனைத் திருப்ப ஏட்டின் படிவம் வரைந்து, எடுத்தெழுதும் முறையை கூறுக.

12) மாற்றுச் சீட்டின் குறிக்கையும், மறுப்பும் குறித்து நீவிர் அறிவது யாது?

13) குறிப்பு வரைக.

அ.தொடக்கப் பாதிவுகள்

ஆ.சரிக்கட்டுப் பதிவுகள்

இ.மாற்றுப் பதிவுகள்

பகுதி-ஈ | 5 x 5 = 25

14) திருமதி .சுபஸ்ரீ அவர்களின் கொள்முதல் ஏட்டில் கீழ்காணும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

மார்ச் 2003

1 சுரேஷிடமிருந்து 100கிலோ காபிக் கோட்டை கிலோ ஒன்று ரூ.40 வீதம் வாங்கியது.

5 ஹரியிடமிருந்து 80 கிலோ டீத்தூள், கிலோ ஒன்று ரூ.20 வீதம் வாங்கியது

12 திருச்சி, ரேகா சுகர்ஸிடமிருந்து 1200 கிலோ சர்க்கரை கிலோ ஒன்று ரூ.8 வீதம் வாங்கியது

18 சென்னை, பெருமாள் சுவீட்ஸிடமிருந்து 40 டின்கள் இனிப்பு, டின் ஒன்று ரூ.200 வீதம் வாங்கியது.

20 சென்னை, கோவிந்த பிஸ்கட் கம்பெனியிடமிருந்து 20 டின் பிஸ்கட்டுகள், டின் ஒன்று ரூ.400 வீதம் வாங்கியது.

15) பின்வரும் விவரங்களைக் கொண்டு மாடர்ன் பர்னிச்சர் மார்ட்டின் விற்பனை ஏட்டைத் தயார் செய்க.

2003 ஜூன்

5 அரவிந்த் & கோவிற்கு கடனுக்கு விற்றது

20 மேஜைகள், மேஜை ஒன்று ரூ.600 வீதம்

20 நாற்காலிகள், நாற்காலி ஒன்று ரூ.300 வீதம்

7 ஆனந்த் & கோவிற்கு ரொக்கத்திற்கு விற்றது

10 மேஜைகள், மேஜை ஒன்று ரூ.300 வீதம்

20 நாற்காலிகள், நாற்காலி ஒன்று 150 வீதம்

10 பாஸ்கர் & கோவிற்கு கடனுக்கு விற்றது

10அலமாரிகள், அலமாரி ஒன்று ரூ.3,000 வீதம்

10 மேஜைகள், மேஜை ஒன்று ரூ.200 வீதம்

15 பழைய தட்டச்சு எந்திரம் கடனுக்கு மதனுக்கு விற்றது ரூ.1,000

20 கோபிநாத்திற்கு கடனுக்கு விற்றது,

10 மேஜைகள், மேஜை ஒன்று ரூ.1,000 வீதம்

2 சுழலும் நாற்காலிகள், நாற்காலி ஒன்று ரூ.200 வீதம்

QB 365 QUESTION BANK 365 https://www.qb365.in

16) கீழ்காணும் நடவடிக்கைகளை உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

| 2003 | | | ரூ. |
|---|---|---|---|
| மார்ச் | 1 | பலராமனிடமிருந்து சரக்கு வாங்கியது | 2,000 |
| | 2 | செந்திலுக்கு சரக்கு விற்றது | 1,000 |
| | 3 | துரையிடமிருந்து சரக்கு வாங்கியது | 1,000 |
| | 5 | சரவணனுக்கு சரக்கு விற்றது | 700 |
| | 8 | செந்திலுக்கு சரக்கு விற்றது | 500 |
| | 10 | இளங்கோவனிடமிருந்து சரக்கு வாங்கியது | 600 |
| | 14 | பார்த்திபனிடமிருந்து சரக்கு வாங்கியது | 300 |
| | 20 | சுகுமாரிக்குச் சரக்கு விற்றது | 600 |

17) பின்வரும் நடவடிக்கைகளை ராம் & கோவின் உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

| **2003** | | | **ரூ.** |
|---|---|---|---|
| ஏப்ரல் | 1 | ரமேஷுக்கு சரக்கு விற்றது | 1,000 |
| | 5 | குமாருக்குச் சரக்கு விற்றது | 2,200 |
| | 8 | சங்கருக்குச் சரக்கு விற்றது | 300 |
| | 10 | குமார் திருப்பிய சரக்கு | 600 |
| | 15 | இடாப்பில் அதிகமான தொகை குறிப்பிட்டிருந்தால் சங்கருக்கு அனுப்பிய வரவுக்குறிப்பு | 200 |

18) திரு.இராஜசேகரின் உரிய துணை ஏடுகளில் கீழ்காணும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| **2003** | | | **ரூ.** |
|---|---|---|---|
| மே | 10 | இராமனிடம் வாங்கிய சரக்கு | 15,000 |
| | 14 | இராமானுக்குத் திருப்பிய சரக்கு | 500 |
| | 18 | சேகரனிடமிருந்து சரக்கு வாங்கியது | 10,000 |
| | 20 | பிரதீப் நமக்கு சரக்கு விற்றது | 10,000 |
| | 24 | சரக்கு அனுப்புகையில் சேதம் ஏற்பட்டதால் சேகரனுக்கு அனுப்பப்பட்ட பற்றுக் குறிப்பு | 1,000 |

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in